# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 180/மா/2022**

**நாள் : 09.11.2022**

திரு. N. தமிழரசு,
சென்னை–600 097. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஒக்கியம் துரைப்பாக்கம், OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் 5.10.2022 நாளிட்ட மனு 7.10.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 180/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஒக்கியம் துரைப்பாக்கம், OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் முறையீட்டு மனுவில் :

"I have sent a complaint to the said respondents, but no action was taken on my complaint so far.

Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you take appropriate action against the respondents for not action taken on my complaint within the timeline.

Note: I have attached copies of my complaints for your review." என தெரிவித்துள்ளார்.

I am natively residing at the above-said address. The water body called Okkiyam Maduvu located at Okkiyampettai, comprised in Survey Nos.401 and 402/1 and Cart Track in Survey No.277/1, which is a Government Poramboke Land. Further, it is the major water channel that drains into the South Buckingham Canal from the suburbs of Chennai such as Madipakkam, Velachery, Pallikaranai into the Pallikaranai Wetland and subsequently into Okkiyam Maduvu.

The said Okkiyam Maduvu is located in Survey Nos.401 and 402/1 and Cart Track in Survey No.277/1 has been encroached by Orchids The International School at Ward No.195, Zone XV, Sowdesshwar Nagar, 4th Cross Street, Okkiyam Thoraipakkam, Chennai – 600 097 and they have built their school building and entrance for the school at the Okkiyam Maduvu

and Cart Track, which will definitely prevent the rainwater from draining into the water body (Okkiyam Maduvu). It is a clear case of encroachment of Government Land for private gains.

There were massive floods in the year 2015 due to heavy rain, the Chembarambakkam reservoir overflowed resulted in massive flooding in places like Madipakkam, Velachery, Pallikaranai where the flood waters couldn't drain freely in Okkiyam Maduvu. Besides in 2021 the heavy rains resulted in similar flooding due to fact that it is hard to drain. Moreover, the same thing happens in rainy season. Hence, it may increase the possibility of disaster in the future.

Recently, the High Court issued strict directions to the concerned authority that "Tamil Nadu Government is to commence massive drive to remove encroachments from water bodies".

Therefore, I request all of you to direct the concerned authority to measure the survey Nos.401, 402/1 and 277/1 and to remove the encroachment made by the Orchids The International School in the Government Poramboke land (Okkiyam Maduvu and Cart Track) in order to allow the free flowing of rain water.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 15ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் 17.10.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது. அவர் தனது 29.10.2022 நாளிட்ட அறிக்கையில்** :

"26.10.2022 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் அழைப்பாணையில் திரு. N. தமிழரசு அவர்களின் 05.10.2022 நாளிட்ட முறையீட்டு மனு சம்பந்தமான 31.10.2022 அன்று விசாரணை நடைபெற உள்ளதாகவும் இவ்விசாரணைக்கு உரிய ஆவணங்களுடனும் புகார் மனு மீதான விரிவான அறிக்கையுடனும் வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு நடுவர் மன்றத்தால் ஆணையிடப்பட்டு கடிதம் வரப்பெற்றது.

சோழிங்கநல்லூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம், ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், மண்டலம்-15, கோட்டம் 195ல் உள்ள (1) ரெட்டை குளம் புல எண்.211/1, பழைய புல எண்.211/B (2) ஒக்கியம் மடுவ புல எண்.401 மற்றும் 402/1 மற்றும் வண்டி பாதை புல எண்.277/1 (3) வேட்டையன் குளம் புல எண்.250 பழைய புல எண்.250 ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு திரு. N. தமிழரசு அவர்களால் கோரப்பட்டுள்ளது.

வார்டு 195 உதவி பொறியாளர் அவர்களால் மேல குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு புகார் தொடர்பாக சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் அவர்களுக்கு 28.10.2022 நாளிட்ட கடிதத்தில் நில அளவையர்களை கொண்டு ஆக்கிரமிப்பு எல்லைகளை கண்டறிந்து நில அளவை செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட புலங்களில் எல்லைகள் நிர்ணயம் செய்த பிறகு, அவ்விடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் கணக்கிடப்பட்டு அவைகளை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் உரிய முறைகளின்படி, வடகிழக்கு பருவமழை காலம் முடிந்தவுடன், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 31.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 31.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–க்கு உட்பட்ட ஒக்கியம் துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர் தாலுக்கா சௌடேஸ்வரி நகர், 4வது குறுக்கு தெரு சர்வே எண் 401 மற்றும் 402/1 மற்றும் சர்வே எண் 277/1 வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து ஆர்க்கிட் இண்டர்நேஷனல் பள்ளி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளிக் கட்டடமானது வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதால், பெரு வெள்ளத்தின்போது

மழை நீர் வெளியே செல்லாமல் அங்கேயே தேங்கி, சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. இதனால் அருகில் உள்ள சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மழைக்காலங்களிலும் மழை நீர் வெளியே செல்லாமல், அங்கேயே தேங்குவது தொடர்ந்து வருகிறது. எனவே, மழை நீர் வெளியே செல்ல அங்குள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவேண்டும். எனவே, வண்டிப்பாதை மற்றும் மடுவினை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள பார்க்கிங் மற்றும் பள்ளிக் கட்டடத்தை அகற்றி, மழை நீர் வெளியேற ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எனது 3.10.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் செயற்பொறியாளர் 31.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்**;

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–க்கு உட்பட்ட ஒக்கியம் துரைப்பாக்கம், சோளிங்கர் தாலுக்கா சௌடேஸ்வரி நகர், 4வது குறுக்கு தெரு சர்வே எண் 401 மற்றும் 402/1 மற்றும் சர்வே எண் 277/1 மற்றும் வேட்டையன் குளம் புல எண் 250 ஆகியவற்றில் நில ஆக்கிரமிப்பு செய்து ஆர்க்கிட் இண்டர்நேஷனல் பள்ளி கட்டடம் மற்றும் பார்க்கிங் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து வட்டாட்சியரின் உதவியுடன் நில அளவை செய்து, மேற்கண்ட பள்ளிக் கட்டடம் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்தால், பொதுப் பணித்துறை மற்றும் வருவாய் துறையுடன் சேர்ந்து ஆக்கிரமிப்புகளை அகற்றிட தேவையான நடவடிக்கை மாநகராட்சியால் எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்"எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம்-15ன் செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் தன்னுடைய மனுவில், ஒக்கியம் துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர் தாலுக்கா, சௌடேஸ்வரி நகர் 4வது குறுக்குத் தெரு சர்வே எண்.401 (ம) 402/1 (ம) சர்வே எண்.277/1, வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து ஆர்க்கிட் இண்டர்நேஷனல் பள்ளி கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சர்வே எண்.401 மற்றும் 402/1, ஆகியவை புறம்போக்கு மற்றும் ஒக்கியம் தொரைப்பாக்கம் Back Water மடுவு கழிவெளி என்பதும் ஆவணங்களின் அடிப்படையில் அறியமுடிகிறது. மேலும், சர்வே எண்.277/1, என்பது வண்டிப்பாதை எனவும் ஆவணங்களின் அடிப்படையில் அறியமுடிகிறது. மேலும், வண்டிபாதையை மறித்து மேற்குறிப்பிட்ட பள்ளியானது, Compound உடன் கூடிய Grille Gate போடப்பட்டுள்ளதும் புகைப்படம் ஆவணங்களின் அடிப்படையில் அறியமுடிகிறது.

**நீர்நிலைகளின் மீது ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றிட, மாண்பமை உச்சநீதிமன்றத்திலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும், பல்வேறு தீர்ப்புகளில் கீழ்க்காணும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

A.Venkatachalam vs The Additional Chief Secretary on 6 October, 2017- __________
**"encroachments on water bodies"**

"It is worthwhile to notice a Full Bench decision of this Court in W.P.No.1294 of 2009, dated 30.10.2015 (T.K.Shanmugam Vs. The State of Tamil nadu and others), wherein the Full Bench has exhaustively dealt with the **encroach**ment on **water bodies**, the relevant portion of which are extracted hereunder:

"A Public Interest Litigation was filed by one Mr.L.Krishnan seeking for a direction against the Government and the Revenue Officials to remove **encroach**ments made by certain private parties in a Odai Poraomboke in Villupuram District. While disposing of the Writ Petition, the Division Bench pointed out that ponds, tanks and lakes have been an essential part of the people's natural resources, however in recent years, these have been illegally **encroached** by unscrupulous persons and this has had adverse effect on the lives of the people. Further, it was pointed out that day in and day out, many petitions are filed by way of Public Interest Litigation alleging **encroach**ments into ponds/tanks/lakes/odai Poramboke etc., in different parts of the State, more particularly in villages. Having regard to the acute **water** scarcity prevailing in the State of Tamil Nadu, it was pointed out that a time has come where the State has to take some definite measures to restore the already earmarked **water** storage tanks, ponds and lakes as disclosed in the revenue records to its original states as part of its rain **water** harvesting scheme. The Court took judicial notice of the action initiated by the State Government by implementing the **water** harvesting scheme as a time bound programme. It was further pointed out that it is imperative that such natural resources provided for **water** shortage facilities are maintained by the State Government by taking all possible steps both by taking preventive measures as well as by removal of unlawful **encroach**ments. After referring to the decision of the Hon'ble Supreme Court in the case of Hinch Lal Tiwari Vs. Kamal Devi reported in 2001 (6) SCC 496, it was held that the endeavour of the State should be to protect the material resources like Forests, Tanks, Ponds etc., in order to maintain ecological balance, which would pave the way to provide a healthy environment and enable the people to enjoy a quality life, which is essence of the right guaranteed under Article 21 of the Constitution. It was further held that in the State of Tamil Nadu having regard to the precarious **water** situation prevailing in the major part of the year, it is imperative that such noted **water** storage resources, such as tanks, odai, oornis, canals etc are not obliterated by encroachers.

A direction was issued to the State Government to identify all such natural **water** resources in different parts of the State and wherever illegal **encroach**ments are found, initiate appropriate steps in accordance with the relevant provisions of law for restoring such natural **water** storage resources which have been classified as such in the revenue records to its original position so that the suffering of the people of the State due to **water** shortage is ameliorated.

". ... .... Cases of **encroach**ment on **water bodies** are really alarming. **Water bodies** are potential source for drinking **water** for human and cattle. Only with a view to protect the same and to help the environment and develop ecology, the Government has enacted the Tamil Nadu Protection of Tanks and Eviction of **Encroach**ment Act, 2007 (Tamil Nadu Act 8 of 2007). The very object of the Act is to find the exact boundary of each Tank in Tamil Nadu and also to detect **encroach**ments for eviction as per the procedure laid down in the said Act. .. .. Occupation of the **water bodies** by way of **encroach**ment will deprive **water** to the public in larger interest ignoring the Public Trust Doctrine. .. ...

The Hon'ble Supreme Court as well as this Court, in a catena of decisions, have time and again held that no **encroach**ment should be tolerated over the **water bodies** which constitute part of the precious natural resources.

P.Rengaraj vs The District Collector on 29 June, 2022 Showing the contexts in which **encroachments on water bodies** appears in the document W.P.(MD)No.13514 of 2022

The case of the petitioner that one aided school, ration shops and temples are located in the **water** body cannot be taken advantage to regularise the **encroach**ment by the petitioner and others to continue the **encroach**ment in **water** body.

**Durai Guna vs The District Collector on 24 August, 2022 - Encroachments on water bodies**

We answer the reference on the following terms:- The provisions of the Tamil Nadu Protection of Tanks and Eviction of **Encroach**ment Act, 2007, does not in any manner dilute the observations / directions issued in <u>L.Krishnan vs. State of Tamil Nadu</u> reported 2005-3-L.W. 313 = 2005(4) CTC 1, as quoted with the approval by the Hon'ble Supreme Court in <u>Jagpal Singh vs. State of Punjab</u>, reported in 2011-3-L.W.17=(2011) 11 SCC 396, and the observations contained in paragraph 20(d)(3) of the judgment of Division Bench in <u>T.S.Senthil Kumar, vs. Government of Tamil Nadu</u>, reported in 2010-3-MLJ 771] and that the tanks which do not fall within the purview of the Tamil Nadu Protection of Tanks and Eviction of **Encroach**ment Act, 2007, also require protection from **encroach**ment and any **encroach**ment made in such tanks or **water bodies** have to be removed by following the provisions of the Tamil Nadu Land **Encroach**ment Act, 1905."

Therefore, it goes without say that in case of the **encroach**ment in **water** body, which comes under the revenue department, the revenue officials are entitled to proceed with eviction by invoking the provisions of Tamil Nadu Land **Encroach**ment Act.

It is clear that all "Kuttai Poramboke" "Pond Poramboke" and other Poramboke lands belong to the Government are to be preserved for protecting the environment and for the usage of the public at large. There cannot be any leniency or misplaced sympathy in respect of such encroachments of the Government land and the authorities competent are duty bound to protect the same in all respects.

Inasmuch as this writ petition has come before us by way of public interest litigation, we take this opportunity to direct the State Government to identify all such natural water resources in different parts of the State and wherever illegal encroachments are found, initiate_appropriate steps in accordance with the relevant provisions of law for restoring such natural water storage resources which have been classified as such in the revenue records to its original position so that the suffering of the people of the State due to water storage is ameliorated.

மேற்குறிப்பிட்டவாறு, பல்வேறு வழக்குகளில் மாண்பமை உச்சநீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவாறும், வலியுறுத்தப்பட்டுள்ளவாறும் நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்வது **<u>சட்டப்படியான குற்றமாகும்</u>** என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விழைகிறது.

விரிவான விசாரணைக்குப்பின், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது.

**2015**ஆம் ஆண்டு நவம்பர் மாதம், வடகிழக்குப் பருவ மழையின் போது பெய்த பெருமழையினால், மழைநீர் சூழ்ந்து அருகிலுள்ள நீர்நிலைகளுக்கு செல்லமுடியாமல், மழைநீர் தேங்கி, அதனால் சுகாதார சீர்கேடுகளுக்கு ஆளாகி, சென்னை மாநகராட்சி மக்கள் பெருந்துயருக்கு உள்ளானதை அனைவரும் மறக்கமுடியாத சம்பவமாகும். அந்த துயர நிகழ்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்கள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பதை இம்முறைமன்றம் சுட்டி காட்டுகிறது. இந்நேர்வில், வண்டிபாதையை ஆக்கிரமித்து கட்டியுள்ளதை மனுதாரர் மனு அளித்த பிறகும் நடவடிக்கை எடுக்காதது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வருட வடகிழக்குப் பருவ மழையினை கருத்தில்கொண்டு, மண்டலம் **15**ன் கள அலுவலர்கள் அனைவரையும் போர்கால நடவடிக்கையில் ஈடுபடுத்தி வண்டி பாதை (சர்வே எண்.**277/1**) ஆக்கிரமித்து இருந்தால், ஆக்கிரமிப்பினை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் மேலும், செயற்பொறியாளர்

தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு வட்டாட்சியரின் அறிக்கை பெற துரித நடவடிக்கை எடுத்து சர்வே எண்.401 மற்றும் 402/1, ஆக்கிரமித்து பள்ளி கட்டடம் கட்டப்பட்டிருந்தால், அதனை அகற்ற பொதுப் பணித்துறை மற்றும் வருவாய் துறை ஒருங்கிணைப்போடு, உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. தமிழரசு,
   வழக்கறிஞர்,
   எண்.3/752, பிள்ளையார் கோவில் தெரு,
   மேட்டுக்குப்பம் (OMR) சென்னை – **600 097.**
2. மண்டல அலுவலர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, சோளிங்கநல்லூர்,
   (பழைய மகாபல்லிபுரம் சாலை), சென்னை – **600 119.**
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – **600 003.**
4. துணை ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – **600 003.** } *He is requested to ensure the implementation of this order*
5. துணை ஆணையர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, சோளிங்கநல்லூர்,
   (பழைய மகாபல்லிபுரம் சாலை), சென்னை – **600 119.** } *He is requested to ensure the implementation of this order*
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – **600 003.**

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

ராமன் 11/11/22

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றம் சென்னை–600 032

7/11